செ.வெ.எண்:19 நாள்:10.07.2018

# <u>பத்திரிக்கை செய்தி</u>

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (10.07.2018) இன்று வாக்குச்சாவடி பட்டியல் மறுசீரமைப்பு (**Rationalization of polling Station**) தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.பிரபாகர் இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.பிரபாகர் இஆப., அவர்கள் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிகளில் கிராமபுற வாக்குச்சாவடிகளுக்கு அதிகபட்சமாக 1,200 வாக்காளர்களுக்கு அதிகமாக உள்ள வாக்குச்சாவடிகளும், மற்றும் நகர்புற வாக்குச்சாவடிகளுக்கு அதிகபட்சமாக 1,400 வாக்காளர்களுக்கு அதிகமாக உள்ள வாக்குச்சாவடிகளும், மேலும் வாக்குச்சாவடி தொலைவு (2கி.மி) அடிப்படையிலும் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு செய்து அதன் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் பிமுகர்களிடம் ஒப்புதல் பெறும் பொருட்டு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஈரோடு மாவட்டத்தில் 2115 வாக்குச்சாவடிகள் இருக்கின்றது. மேற்கண்ட காரணங்களினால் 86 வாக்குச்சாவடிகள் கூடுதலாக அமைக்கப்பட்டு 2201 வாக்குச்சாவடிகளாக மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. வரைவு வாக்குச்சாவடி பட்டியல் நகல்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வரைவு வாக்குச்சாவடி பட்டியல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஏதேனும் ஆட்சேபனைகள், கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் சம்மந்தப்பட்ட உதவி வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியரிடமோ, வருவாய் கோட்ட அலுவலரிடமோ, அல்லது மாவட்ட ஆட்சியரிடமோ எழுத்துப் பூர்வமாக 16.07.2018-க்குள் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், ஈரோடு.